10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 123 புதன்கிழமை செப்ரெம்பர் 20 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## மாவா பாக்குடன் மாணவன் கைது

யாழ். சங்குவேலிப் பகுதியில் கஞ்சா கலந்த மாவா பாக்கினைத் தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பாடசாலை மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த மாணவனை இன்று காலை கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த மாணவனிடம் பொலிஸார் சோதனை செய்துள்ளனர். இதன் போது கஞ்சா கலந்த மாவா பாக்கு

06

## நல்லிணக்கத்துக்கு குறுக்கு வழி கிடையாது

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு குறுக்கு வழிகள் கிடையாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 72ஆம் அமர்வுகளில் பங்கேற்று உரையாற்றிய ஜனாதிபதி, "நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் முனைப்புக்களில் சில கடும்போக்குவாதிகள் குறுகிய கால தீர்வுத் திட்டங்களின் ஊடாக வேகமான பயணத்தை எதிர்பார்க்கின்றனர். பேண்தகு தீர்வுத் திட்டமொன்றை பெற்றுக் கொடுப்பது துரித கதியில் வழங்கப்பட முடியாது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் நாட்டில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ)

## வல்லிபுராழ்வார் கொடியேற்றம்



வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுராழ்வார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இதன் போது அதிகளவான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். (உ)

## ரயில்வே ஊழியர் போராட்டம் வாபஸ்

இன்று புதன்கிழமை நள்ளிரவு முதல், 48 மணிநேரம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அறிவித்திருந்த, ரயில் சாரதிகள், ஒழுங்குமுறை கட்டுப்படுத்துனர் மற்றும் நிலைய அதிபர்கள், அந்தப் போராட்டத்தை கைவிட்டுள்ளதாக தெரிவித்தனர்.

பிரதமரின் செயலாளருடன் இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தை களையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். சம்பள முரண்பாடுகளுக்கு, தேசிய சம்பள மற்றும் சேவை ஊழியர் ஆளனி ஆணைக்குழு உரிய தீர்வை வழங்கவில்லை என்றும் உரிய தீர்வை வலியுறுத்தியே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் ரயில் இயக்குநர்களின் மேற்பார்வையாளர் சங்கத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் லால் ஆரியரத்ன தெரிவித்திருந்தார்.

எனினும், இந்த கோரிக்கைகள் தொடர்பில், எழுத்துமூலமான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதால், அந்தப் போராட்டத்தை கைவிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (உ)

## தென்கொரியாவில் இராணுவத் தளபதி



இந்தோ- ஆசிய பசுபிக் நாடுகளின் இராணுவத்தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தென்கொரியா சென்றுள்ளார்.


சியோலில் இடம்பெறும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுக்காக இந்த மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான நான்கு நாட்களைக் கொண்ட மாநாட்டில் பங்குபற்றுவதற்காகவே இராணுவத்தளபதி கடந்த 18 ஆம் திகதி தென்கொரியாவுக்குச் சென்றுள்ளார்.

'ஒற்றுமை முயற்சி இராணுவ பங்கீட்டுக்கான தரைப்படை நடவடிக்கைகள் அல்லாத பாரம்பரியமான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள்' என்ற தொனிப்பொருளில் இந்த மாநாடு இடம்பெறுகின்றது.

29 நாடுகளின் இராணுவத் தளபதிகள் பங்கேற்றுள்ள இந்த மாநாட்டில் முன்னாள் ஐக்கியநாடுகளின் செயலாளர் ஜெனரல் பான்கிமூன் முதல் நாள் பிரதான உரையை நிகழ்த்தினார்.இந்த ஆண்டு

06

# நாடாளுமன்றில் குழப்பம்



### "சுமந்திரன் பேச்சு நின்று போச்சு"

மாகாணசபைத் திருத்தச் சட்டத்தை ஆதரித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உரையாற்ற முற்பட்ட போதுசபையில் ஏற்பட்ட கூச்சல் குழப்பம் காரணமாக, சபை நடவடிக்கைகள் பிற்பகல்வரை ஒத்திவைக்கப்பட்டன. சுமந்திரனை உரையாற்ற அனுமதிக்காது ஒன்றிணைந்த எதிரணியின் உறுப்பினர்கள் கூச்சல் குழப்பம் விளைவித்தனர். எனினும் அதனைப் பொருட்படுத்தாது எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தின் பின்னால் உள்ள ஆசனத்தினருகில்

06

## மாணவிக்கு முத்தம்: சந்தேகநபர் கைது!



யாழ்ப்பாணம் - மண்டைத் தீவு பகுதியில் விளையாட்டு பயிற்சியில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவிக்கு, பலாத்காரமாக முத்தமிட்ட நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மண்டை தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதான பாடசாலை மாணவி ஒருவர் விளையாட்டரங்கில் பயிற்சி செய்து விட்டு ஓய்வறைக்குச் சென்றுள்ளார். அப்போது அவரைப் பின் தொடர்ந்து சென்ற சந்தேக நபர் அறைக்குள் வைத்து, மாணவியின் எதிர்ப்பையும்

06

## லலித்துக்கு பிணை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் நிபந்தனைகளுடன் பிணையில் இன்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.கொழும்பு மேல் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.தலா ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணையி அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.மேலும் அவர்களது வெளிநாட்டு பயணங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜனாதிபதி தேர்தல் நேரத்தின் போது,

06

## ஐ.நா. அமர்வில் மைத்திரி குடும்பம்




ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 72 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன , தனது மனைவி ஜயந்தி சிறிசேன, மகன் தஹாம் சிறிசேன, மகள் சத்துரிக்கா சிறிசேன ஆகியோருடன் குடும்பமாக சென்றுள்ள விடயம் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது.

முன்னைய ஜனாதிபதி மகிந்த, இவ்வாறான கூட்டங்களுக்கு தன் மனைவி, பிள்ளைகள் சகிதம் பெரும் கும்பலை அழைத்துச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார். இதனை நல்லாட்சி அரசு இப்போதும் கிண்டலடித்து வருகின்றது. இந்த நிலையில் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் மைத்திரியின் மகனான தஹாம் சிறிசேன ஐ.நா. கூட்டங்களுக்கு சென்றிருந்தார். இலங்கையின் பிரதிநிதிகள் குழுவுடன் தஹாம் அமர்ந்திருந்த புகைப்படங்கள் வெளியாகி , மைத்திரிக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது.இவ்வாறான நிலையில் தற்போது தன் முழுக்குடும்பத்தினரையும் ஐ.நா. அமர்வுக்காக மைத்திரி அழைத்துச் சென்றிருப்பதன் மூலம் அவரும் மகிந்தவின் பாதையிலேயே பயணிக்கிறார் என்று அரசி

06

## மின்சாரம் வழமைக்கு: அரசாங்கம் அறிவிப்பு

நாட்டின் மின்சார சேவையை சாதாரண நிலைமையில் வழிநடத்திச் செல்வதாக மின்சக்தி மற்றும் நிலைபேறான எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. எந்தக் காரணத்திற்காகவும் மக்களுக்கு பிரச்சினை ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என அமைச்சு வலியுறுத்தியுள்ளது. மின்சார சபை ஊழியர்கள் தற்போது தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள போதிலும் நுரைச்சோலை, கெரவலப்பிட்டி உள்ளிட்ட அனைத்து மின்நிலையங்களும் வழமை போன்று இயங்கி வருகின்றன. நாட்டின் சில பிரதேசங்களில் சிறிய அளவில் மின்விநியோகம் தடைப்பட்டுள்ள போதிலும், அதனை வழமை நிலைக்கு கொண்டுவர கூடிய விரைவில் அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (உ)

## மதுபோதையில் சென்ற சாரதியால் விபத்து



வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் இரு சிறுவர்கள் உட்பட நால்வர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வவுனியா, மரக்காரம்பளை வீதி, காத்தான் கோட்டம் சந்திக்கு அருகே நேற்று இரவு 7.20மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றது. மரக்காரம்பளை வீதியூடாக வவுனியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும், குழுமாட்டுச் சந்தியிலிருந்து கணேசபுரம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியும் காத்தான்கோட்டம் சந்திக்கு அருகில் மோதி விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு சிறுவர்கள் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். முச்சக்கரவண்டியின் சாரதி மது போதையில் இருந்தமையே விபத்துக்குக் காரணம் என கூறப்படுகின்றது. முச்சக்கரவண்டியின் சாரதியை நெளுக்குளம் போக்குவரத்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ)

## விரட்டிச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானது



வவுனியாவில் மரம் கடத்திச் சென்ற ஹன்ரர் ரக வாகனத்தை விசேட அதிரடிப் படையினரும், வன இலாகா அதிகாரிகளும் விரட்டிச் சென்ற போது விபத்துக்குள்ளாகியுள்ளது. இன்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, ஓமந்தை, குஞ்சுக்குளம் பகுதியில் இருந்து பெறுமதியான மரங்களை ஏற்றிச் சென்ற ஹன்ரர் ரக வாகனம் வவுனியா நகரம் நோக்கி பயணித்தது. அதன் போது பெரியமடு பகுதி விசேட அதிரடிப்படையினரும், வனஇலாகா அதிகாரிகளும் குறித்த வாகனத்தை மறித்து சோதனையிட முயன்றுள்ளனர். இதன்போது குறித்த வாகனம் நிறுத்தப்படாது தப்பிச் சென்றுள்ளது. விசேட அதிரடிப்படையினரும், ஓமந்தை வனஇலாகா அதிகாரிகளும் குறித்த வாகனத்தை பின் தொடர்ந்து துரத்தினர். அதன்போது வவுனியா, பேயாடிகூழாங்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமமுக்கு அருகில் உள்ள புகையிரதக் கடவையைக் கடக்க முற்பட்ட குறித்த வாகனம் அப் பகுதியில் விபத்துக்குள்ளாகித் தடம் புரண்டது. எனினும் சாரதியும், அதில் பயணித்தவர்களும் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## தமிழ், முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம்



"இந்த நாட்டில் இடம்பெற்ற இனப்பிரச்சினைகளுக்கு நல்ல தொரு தீர்வை வழங்க முடியும். எனவே தமிழ், முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை" என, தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார். "தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே, புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன், முஸ்லிம் கட்சிகளும் ஆதரவு தெரிவித்து வருகின்றன" எனவும் அவர் தெரிவித்தார். அம்பாறை, திருக்கோவில், சாகாமம் கிராமத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,"17 வருடங்களின் பின்னர் மீண்டும் ஒரு புதிய யாப்புச் சீர்திருத்தத்தை வரைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனூடாக, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது." -என்றார். (எ)

## நாடாளுமன்ற வீதியில் பலத்த பாதுகாப்பு

நாடாளுமன்றுக்குள் உள்நுழையும் வீதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு இடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அங்கவீனமடைந்த இராணுவத்தினர் நாடாளுமன்ற வீதியில் எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை இன்று மேற்கொண்டுள்ளனர். அவர்கள் நாடாளுமன்றம் நோக்கி நகரவிடாது தடுக்கும் நோக்கிலேயே வீதித்தடையும் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கலகம் அடக்கும் பொலிஸார், சாலை தடைகள் மற்றும் நீர்ப்பாய்ச்சி வாகனம் ஆகியவை களத்தில் ஆயத்த நிலையில் உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## போராட்டங்களில் மாணவர்களை ஈடுபடுத்தத் தடை

பாடசாலை நேரத்தில் மாணவ, மாணவியர் போராட்டங்களில் ஈடுபடுவதைத் தடை செய்யும் வகையில் விசேட சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாரச்சி இது தொடர்பில் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலய பணிப்பாளர்களுக்கு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார். இந்த சுற்றுநிருபத்தில், கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்களின் அனுமதியின்றி பாடசாலை காலத்தில் மாணவ, மாணவியரை பல்வேறு போராட்டங்களில் பங்கேற்கச் செய்தல், அனுமதியின்றி பாடசாலை பிரதேசத்துள் போராட்டக்காரர்கள் பிரவேசித்தல் ஆகியனவற்றுக்கு அனுமதி அளிக்கப்படக் கூடாது. பாடசாலை மாணவ மாணவியரை பிழையாக வழிநடத்தும் வகையில் சில தரப்பினர் செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளினால் கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பாடசாலை நேரத்தில் பாடசாலை மாணவ, மாணவியர் போராட்டங்கள் அல்லது வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்படாது என சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## 700 கோடிக்கு குறைநிரப்பு பிரேரணை

மேல் மாகாண சபையில் நேற்று சுமார் 700 கோடி ரூபாவுக்கு குறைநிரப்புப் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. மேல்மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த பிரசன்ன ரணதுங்க கடந்த 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இசுரு தேவப்பிரியவை முதலமைச்சராக நியமித்திருந்தார். முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் தீவிர ஆதரவாளர்களில் ஒருவராக இருந்த இசுரு தேவப்பிரிய முதலமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்டவுடன் மைத்திரி அணிக்குத் தாவியிருந்தார். எனினும், மேல் மாகாண சபையில் மகிந்த அணி மாகாண சபை உறுப்பினர்களும் கணிசமான அளவில் இருப்பதன் காரணமாக மாகாண சபை நிர்வாகத்தை நடத்திச் செல்வதில் அவர் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டிருந்தது. அந்நிலையில் உறுப்பினர்களை சமாதானப்படுத்தி மாகாண சபை நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்காக கடந்த ஆண்டு அவர்களுக்கு பல்வேறு வரப்பிரசாதங்கள் மற்றும் விசேட அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கான நிதிச் செலவீனங்களை ஈடு கட்டும் வகையில் நேற்றைய தினம் மாகாண சபை அமர்வின் போது முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய 700 கோடி ரூபா குறைநிரப்புப் பிரேரணையொன்றை சமர்ப்பித்திருந்தார்.

## பல மில்லியன் செலவுசெய்தும் பயன்படுத்தப்படாத சந்தை

முல்லைத்தீவு, மாந்தை கிழக்குப் பிரதேச சபையினால் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச்சந்தை பயன்பாடற்ற நிலையில் காணப்படுவதாக பொது மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். குறித்த, பிரதேச சபைக்கு உட்பட்ட பாண்டியன்குளம் பகுதியில் பல மில்லியன் ரூபா செலவில் புதிய சந்தைக்கான கட்டடத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான கடைத்தொகுதிகள் மற்றும் ஏனைய கட்டடத்தொகுதிகள் என்பன அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளபோதிலும் குறித்த சந்தையானது மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. பாண்டியன்குளம் பாடசாலை, கமநலசேவை நிலையம், பிரதேச செயலகம் உள்ளிட்ட சகல திணைக்களங்களும் ஒருங்கே அமைந்த பாண்டியன்குளம் சந்தைப் பகுதியில் குறித்த சந்தைக் கட்டடத்தை அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் மக்களின் கோரிக்கைக்கு மாறாக வேறு ஒரு இடத்தில் பல மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தைக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.



இந்நிலையில், பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தச் சந்தை தற்போது பயன்பாடற்று காணப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (உ)

## பார்வையாளர்களை தாக்கிய ஏவுகணை

ரஷ்ய இராணுவம் மேற்கொண்ட போர்ப்பயிற்சியின்போது ஹெலிகொப்டர் ஒன்று பார்வையாளர்கள் மீது ஏவுகணையை வீசியுள்ளது. குறித்த சம்பவத்தில் பார்வையாளர்கள் இருவர் பலத்த காயமடைந்துள்ளனர். சில வாகனங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.
இந்தச் சம்பவம் தொடர்பான முதற்கட்ட விசாரணையில் விமானியின் கவனக் குறைவாலேயே ஏவுகணை வீசப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. படுகாயமடைந்துள்ள இருவரும் ஊடகவியலாளர்கள் எனவும், அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகிறது. (இ)

## வியூகம் தயார்

கொரியத் தீபகற்பத்தில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் போர்ச்சூழலுக்கிடையே, வடகொரியாவுக்கு எதிரான போர் வியூகங்கள் தயார் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. கடந்த வெள்ளியன்று ஜப்பானை இலக்கு வைத்து வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை மேற்கொண்டதை அடுத்து அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை செயலர் மாற்றிஸ் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.
தென் கொரியாவுக்கான பாதுகாப்புத்துறைச் செயலருடன் பேச்சுவார்த்தை நடத்திய மாற்றிஸ், தங்களது அணுஆயுதத் திட்டத்தை கொரியத் தீபகற்பத்தில் அறிமுகப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் வடகொரியாவுக்கு எதிரான போர் வியூகங்கள் எவை என்பது குறித்து மேலதிக தகவல்களைப் பகிர்ந்துகொள்ள அவர் மறுத்துள்ளார்.
" மிகவும் துல்லியமான தற்கால சூழலுக்கு ஏற்ப இந்த வியூகங்களை வகுத்துள்ளோம். இதுவரை வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் ஐ.நா. சபை ஆகியவை ஒன்றிணைந்து மேற்கொண்ட பொருளாதார அழுத்தங்கள் திட்டமிட்டபடி செயற்பாட்டுக்கு வந்துள்ளன. அடுத்த மாதம் விமானம் தாங்கிக் கப்பல் ஒன்றை கொரியத் தீபகற்பம் நோக்கி அனுப்பி வைக்க உள்ளோம்" எனவும் மாற்றிஸ் தெரிவித்துள்ளார். (இ)

# மெக்சிக்கோ நடுங்கியது




மெக்சிகோவில் நேற்றிரவு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.1 ஆக பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் பல அடுக்குமாடிக் கட்டடங்கள் குலுங்கின. இந்த நிலநடுக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 119 ஆக உயர்ந்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் பல கட்டடங்கள் இடிந்து விழுந்ததால் கட்டட இடிபாடுகளில் சிக்கி இன்னும் பலர் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.
"மெக்சிகோவை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். உங்களுக்கு அமெரிக்கா எப்போதும் துணை நிற்கும்" இவ்வாறு மெக்சிகோ நிலநடுக்கத்துக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ருவிட்டரில் இரங்கல் தெரிவித்துள்ளார். (இ)

# போனது இர்மா: வந்தது மரியா

இர்மா புயலைத் தொடர்ந்து, மரியா என்ற புயல் டொமினிக் குடியரசு நாட்டில் பேரழிவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.
அட்லாண்டிக் பெருங்கடலில் கடந்த வாரம் உருவான சக்தி வாய்ந்த இர்மா புயல் மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத்தில் கரீபியன் தீவுகள், அமெரிக்காவின் புளோரிடா உள்ளிட்ட மாகாணங்களைச் சூறையாடியது.
புயலுடன் பெய்த கனமழையின் எதிரொலியாக பல முக்கிய நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இதில் ஏறத்தாழ 100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். வெள்ள நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் ஓரளவுக்கு முடிந்த நிலையில் இர்மா புயலைத் தொடர்ந்து அட்லாண்டிக் கடலில் உருவான புதிய புயலான மரியா, கரீபியன் நாடுகளில் மீண்டும் ஒரு பேரழிவை விளைவிக்கும் என அஞ்சப்படுகிறது. இதனால் மிக அதிக அளவு 5 ஆம் எண் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.



ப்யூட்டோ ரிகோ தீவின் அருகே மேற்கு நோக்கி நகர்ந்து சென்ற இந்தப்புயல் காரணமாக மணிக்கு 260 கிலோ மீற்றர் வேகத்தில் பயங்கரக் காற்றுடன் கூடிய மழை பெய்தது. தற்போது டொமினிக் குடியரசு நாட்டை மிகத் தீவிரமாக இப்புயல் தாக்கியுள்ளது. தொடர்ந்து ஹெய்ட்டி மற்றும் கியூபாவும் இந்தப்புயலால் பெருமளவு பாதிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது. (இ)

# வெளியே போ!

"வடகொரியத் தூதர் எங்கள் நாட்டிலிருந்து வெளியேற வேண்டும்" என்று ஸ்பெயின் கேட்டுக் கொண்டுள்ளது.
உலக நாடுகளின் எதிர்ப்புகள், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தடை என் பவற்றை மீறி வடகொரியா தொடர்ந்து அணுஆயுத ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது.
இதனைத் தொடர்ந்து உலக நாடுகள் பலவும் தங்கள் நாட்டிலுள்ள வடகொரியத் தூதர்களை வெளியேறுமாறு வலியுறுத்தி வருகின்றன.
இந்த நிலையில் ஸ்பெயினும் தங்கள் நாட்டிலுள்ள வடகொரியத் தூதரை வெளியேறுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.
இதுகுறித்து ஸ்பெயினின் வெளியுறவுத் துறை அமைச்சர் கூறும்போது, "எங்கள் நாட்டிலுள்ள வடகொரியத் தூதரை இந்த மாத இறுதிக்குள் வெளியேறுமாறு கேட்டுக் கொண்டுள்ளோம்" என்றார். (இ)

## வடகொரியாவுக்கு பாகிஸ்தான் உதவி?

அவடகொரியாவின் அணுஆயுதச் சோதனைக்கு பாகிஸ்தான் உதவி செய்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
வடகொரியா தொடர்ந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது.
சமீபத்தில் மேற்கொண்ட ஏவுகணைச் சோதனை கூட ஜப்பானை நோக்கி நடத்தப்பட்டதால், அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் வடகொரியாவின் செயலுக்குக் கண்டனம் தெரிவித்தன.
அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வடகொரியாவை ஒட்டு மொத்தமாக அழித்துவிடுவோம் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.
இந்நிலையில் வடகொரியாவின் அணு ஆயுதச் சோதனைக்கு உதவி செய்பவர்கள் கண்டறியப்பட வேண்டும் என்று இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மாஸ்வராஜ் வலியுறுத்தியுள்ளார்.
வடகொரியாவுக்கு பாகிஸ்தான் அணு ஆயுதத் தொழில் நுட்பங்களைப் பகிர்ந்து வருவதாக கூறப்படும் நிலையில், இது தொடர்பான தகவல்களை பாகிஸ்தான் அணு விஞ்ஞானிகளான அப்துல் காதிர்கான், பெர்வேஸ் ஹூத் போய் ஆகியோரும் வெளியிட்டனர்.
இதையடுத்து நியூயார்க்கில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் வெளியுறவு அமைச்சர்களுடனான கூட்டத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் பங்கேற்றார். அப்போது அவர் பாகிஸ்தானின் பெயரைக் குறிப்பிடாமல் "வடகொரியாவின் அணு ஆயுதச் சோதனையுடன் தொடர்புடையவர்கள் கண்டறியப்பட வேண்டும். அவர்களே இந்த அணு ஆயுதச் சோதனைக்குப் பொறுப்பாக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (இ)

# சாவிலும் இணைந்த காதல் தம்பதியர்

கனடா நாட்டில் 75 ஆண்டுகளாக இணைந்து வாழ்ந்து வந்த தம்பதியர் 5 மணி நேர இடைவெளியில் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளனர். ஜோர்ஜ்(வயது-95), ஜீன் ஸ்பியர்(வயது-94) ஆகியோரே இவ்வாறு சாவிலும் இணைந்த தம்பதியர். கனடாவைச் சேர்ந்த ஜோர்ஜ் அந்த நாட்டு இராணுவத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். இரண்டாம் உலகப்போரில், 1941ஆம் ஆண்டு பிரிட்டனின் தலைநகரான லண்டனில் போர் புரிய சென்றுள்ளார். அப்போது, பிரிட்டனில் பிறந்த ஜீன் ஸ்பியரைச் சந்தித்து அவருடன் காதல் வசப்பட்டுள்ளார். இருவரும் திருமணம் செய்த பின்னர் கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் குடியேறியுள்ளனர். கடந்த 2011ஆம் ஆண்டு ஒட்டாவா நகருக்கு பிரிட்டன் இளவரசியான கேட் மிடில்டன் சென்றபோது இத்தம்பதியரை நேரில் சந்தித்துள்ளார்.
இந்நிலையில், கடந்த புதன்கிழமை நிமோனியாக் காய்ச்சல் காரணமாக ஜீன் ஸ்பியர் ஒட்டாவாவில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவரைத் தொடர்ந்து கணவருக்கும் உடல் நிலை மோசமடைந்தது.
அவரும் அதே மருத்துவமனையில் வேறு அறைகளில் சேர்க்கப்பட்டார். கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஜீன் ஸ்பியர் 4 மணியளவில் உயிரிழந்துள்ளார். மனைவி வைக்கப்பட்டுள்ள அறைக்கு செல்ல ஏற்பாடுகள் நடந்தபோது ஜோர்ஜும் -மனைவியை இறுதியாகப் பார்க்காமலேயே-உயிரிழந்துள்ளார். (இ)





# முதலை முதுகில் ஓவியா

பிக்பாஸ் நிகழ்ச்சி மூலமாக தமிழ் மக்களின் மனதைக் கவர்ந்தவர் ஓவியா. இந்த நிகழ்ச்சியில் இவர் வெளியேறியதால் ரசிகர்கள் மிகவும் வருத்தத்தில் இருந்தனர்.மீண்டும் பிக்பாஸ் வீட்டுக்குள் வர விரும்பவில்லை என்று கூறிய ஓவியாவின் புகைப்படங்கள் அவ்வப்போது வெளியாகி வைரலாகச் சுற்றி வருகின்றன.அத்துடன் ஓவியாவின் பெயரில் இப்போது சேலை கூட அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அந்தச் சேலை விளம்பத்தில் மற்றொரு பிக்பாஸ் போட்டியாளரான ரைஸா நடித்துள்ளார். இந்த நிலையில் தற்போது ஓவியாவின் புதிய புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது. அந்தப் படத்தில் ஓவியா முதலை மீது அமர்ந்திருக்கிறார். இந்தப் புகைப்படத்தை ஓவியா ரசிகர்கள் வேகமாகப் பகிர்ந்து வருகின்றனர். (இ)

# மிரட்டும் போஸ்டர்

அனைத்துத் தரப்பு ரசிகர்களாலும் தற்போது அதிகம் எதிர்பார்க்கப்படும் திரைப்படம் மெர்சல். தளபதி விஜய் நடிப்பில், அட்லீ இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தப்படத்தின் டீசர் நாளை 6 மணிக்கு இணையத்தில் வெளியாகவுள்ளது.

இதேவேளை மெர்சல் படத்தின் புதிய போஸ்டர் நேற்று வெளியானது. இதில் 80ஆம் ஆண்டுகளின் பின்னணியில் வரும் விஜய் தன் மனைவி நித்யா மேனனுடனும், குட்டி விஜய்யுடனும் புகைப்படம் எடுப்பது போன்ற காட்சி வெளியாகியுள்ளது. இதில் இவர்களுடன் ஜல்லிக்கட்டுக் காளையும் இடம் பெற்றுள்ளது. விஜய், குட்டி விஜய், காளை மூவருக்கும் பட்டை போடப்பட்டுள்ளது. இதில் ஒரு குட்டிப்பையன் மட்டுமே உள்ளதால் விஜய் இரண்டு கதாபாத்திரத்தில் மட்டுமே நடிக்கிறார் என்பது தெரிகிறது.

டீசரில் இன்னும் பல சுவாரசியங்கள் காத்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(இ)







# முத்த 'செல்பி'



சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை பிரபலங்கள் பலருக்கும் இருக்கிறது.

அந்த ஆசை சீரியல் நடிகை சைத்ரா ரெட்டிக்கும் இருந்ததாம். அவர் சமீபத்தில் காலா படப்பிடிப்பில் சூப்பர்ஸ்டாரைச் சந்தித்து அவருக்கு முத்தம் வழங்கி 'செல்பி' எடுத்துள்ளார். இந்தப் புகைப்படம் வைரலாகப் பரவி வருகிறது.

இவர் 'கல்யாணம் முதல் காதல் வரை' சீரியலில் கதாநாயகியாக நடித்தார். தற்போது யாரடி நீ மோகினி சீரியலில் வில்லியாக நடித்து வருகிறார்(இ)

# சினேகனோடு இரவில் பிந்து



பிக்பாஸ் நிகழ்ச்சியில் தற்போது 6 பேரே மீதமுள்ளனர். ஒவ்வொரு நாளும் விதவிதமான இலக்குகளைக் கொடுத்து, அவர்களை பிக்பாஸ் சிரமப்படுத்தி வருகிறார். நேற்று சினேகனுக்கு கொடுக்கப்பட்ட இலக்கில், அவருக்குக் கொடுக்கப்படும் விளக்கை இரவு முழுவதும் அணையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது.அவருக்கு உதவியாக ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்றும் கூறியதையடுத்து, சினேகன் பிந்து மாதவியைத் தேர்ந்தெடுத்து இரவு முழுவதும் விளக்கையும், பிந்து மாதவியையும் பார்த்துக் கொண்டிருந்தார். (இ)

# முன்னேற்றம்

உலக லெவன் அணியில் கலக்கிய இலங்கை நட்சத்திர வீரர் திசர பெரேரா, ஐசிசி வெளியிட்ட ரி-20 போட்டிக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் 16 இடங்கள் முன்னேறி 53 ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

உலக லெவன் அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் இடம்பெற்ற இரண்டாவது ரி-20 போட்டியில் உலக லெவன் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியில் திசர பெரரா அபாரமாகத் துடுப்பாடி, 19 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.இதேவேளை, ரி-20 பந்து வீச்சாளர் தரவரிசை பட்டியலிலும் பெரேரா 13 இடங்கள் முன்னேறியுள்ளார்.

மேலும் ரி-20 போட்டியின் சகலதுறை வீரர்கள் பட்டியலில் 19 ஆவது இடத்தை அவர் பெற்றுள்ளார். (இ)

# இலங்கைக்கு இங்கிலாந்தின் பிச்சை!




இங்கிலாந்துடனான ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று தோல்வியடைந்ததால், இலங்கை அணி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளது.

இந்திய அணி, இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடிய போது இந்திய அணி தொடரை முழுமையாக வென்றது. இதனால் இலங்கை அணி உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறுவதும் சிக்கல் என்று கூறப்பட்டது.

ஏனெனில்தரவரிசையில் முதல் எட்டு இடங்களில் இருக்கும் அணிகளே உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி பெறும். அந்த வகையில் இந்தியாவுடன், இலங்கை அணி தோற்றதால் புள்ளிப் பட்டியலில் இலங்கை அணி பின்னுக்குச் சென்றது.

அதுமட்டுமின்றி மேற்கிந்தியத் தீவு அணி, இங்கிலாந்து அணியுடன் மோதும் ஒருநாள் போட்டி தொடரைக் கொண்டு தரவரிசையில் இலங்கை இன்னும் பின்னடைவைச் சந்திக்கலாம் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில் நேற்று நடந்த இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவு அணிக்கெதிரான முதல் ஒருநாள் போட்டியில்இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் அணி தற்போது 78 புள்ளிகளுடன் 9 ஆவது இடத்திலும், இலங்கை அணி 86 புள்ளிகளுடன் 8 ஆவது இடத்திலும் உள்ளன. மேற்கிந்திய தீவு அணி முதல் போட்டியில் இங்கிலாந்து அணியுடன் தோல்வியைச் சந்தித்துவிட்டதால்இனி மேற்கிந்திய தீவு அணி, தரவரிசைப்பட்டியலில் இலங்கை அணியைப் பின்னுக்குத் தள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் இலங்கை அணி உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளது. (இ)



## மகிந்த கேட்ட முதல் கேள்வி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், நாடாளுமன்றத்தில், நேற்று முதல் முறையாகக் கேள்வியெழுப்பினார். சபையில் எழுந்த அவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், "உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எப்போது நடைபெறும்?" என்று, வினவினார். இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "புதிய தேர்தல் முறைக்கு நாடாளுமன்றத்தில் அனுமதி கிடைத்துள்ளது. கடந்த கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின் போது மாகாண சபை தேர்தல் குறித்து கலந்துரையாடப்பட்டது. உள்ளூராட்சி மன்ற தேர்தல், ஜனவரியில் நடைபெறும்" என்று கூறியமர்ந்தார். (உ)

## தேர்தல் தாமதமாகும்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான சட்டத்தில், திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை எனில், அத்தேர்தலை, 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடத்தமுடியாது" என்று, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். உள்ளூராட்சிச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னர், இன்னும் சில சட்டமூலங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். உள்ளூராட்சி சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர், வாக்கெடுப்பு நடத்துவதற்கு, 75 நாட்கள் தேவை. ஆகையால், திருத்தங்களை நிறைவேற்றுவது காலதாமதம் ஆகுமாயின், வாக்கெடுப்பும் தாமதமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## இன்றைய கருத்தோவியம்




## யானை தாக்கி ஒருவர் பலி

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 3ஆம் கொலனி பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம் வினோ (வயது-36) என்ற குடும்பஸ்தர், நேற்று மாலை யானைத் தாக்குதலுக்குள்ளாகி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளாரென, சேருநுவர பொலிஸார் குறிப்பிட்டனர். குறித்த நபர், மாடு பார்ப்பதாக காட்டுப் பகுதிக்குச் சென்று மாலையாகியும் வீடு சேரவில்லை. இதனை அறிந்த குடும்பத்தினரும் அயலவர்களும் தேடுதல் மேற்கொண்டபோது, அவர்யானையின் தாக்குதலுக்குள்ளாகி காட்டுப் பகுதியில் சடலமாகக் கிடந்துள்ளார். (உ)

## நவராத்திரி கொலுவில் 'ஜெயா' பொம்மை



நவராத்திரி பண்டிகைக்காக வைக்கப்படும் கொலுவில் இந்த ஆண்டின் புதிய வரவாக வந்துள்ள ஜெயலலிதா பொம்மைக்கு ருவிட்டரில் கடும் சர்ச்சை எழுந்துள்ளது. இந்த ஆண்டின் புதுவரவு என்று ஜெயலலிதாவின் கொலு பொம்மையை ஒருவர் பதிவிட்டிருந்தார். ஜெயலலிதாவின் மார்பளவு பொம்மை, முழுஉருவ பொம்மை என இரண்டு வகையில் இந்த ஆண்டு கொலுவுக்கு பொம்மை விற்பனைக்கு வந்திருப்பது தொடர்பில் ருவிட் செய்துள்ளார். கொலுவில் ஜெயலலிதாவின் பொம்மைக்கு எதிர்ப்பும் வரவேற்பும் கிளம்பியுள்ளது. ஜெயலலிதாவின் கொலு பொம்மையை வரவேற்பதாக மற்றொருவர் ருவிட் செய்து, பொம்மைகளுக்கு பின்னான அற்புதக் கதைகள் இப்படிதானிருக்கும் என்பதை இதை விட எளிமையாக எப்படி விளக்கிவிட முடியும்? என்றும் கேட்டுள்ளார். எனினும் சட்டத்தால் தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளியை எப்படி கடவுளாக்குவது என்று "ஜெயா பொம்மைக்கு ருவிட்டரில் கடும் எதிர்ப்பும் வலுக்கிறது. சொத்துக் குவிப்பு வழக்கில் உச்சநீதிமன்றத்தால் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு அவர் உயிரிழந்ததால் வழக்கில் விடுவிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி இவ்வாறு பதிவிடப்பட்டுள்ளது. (உ)

## வெலே சுதாவின் சொத்து பராமரிப்புக்கு ஆட்சேபனை

ஹெரோயின் வைத்திருந்த, விற்ற குற்றச்சாட்டில் மரண தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள வெலே சுதா என்றழைக்கப்படும் சமந்தகுமார அவருடைய மனைவி மற்றும் தங்கைக்கு எதிரான வழக்கில், சொத்துப் பராமரிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு பிரதிவாதிகள் தரப்பினால், ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. ராஜகிரிய ரோயல் பார்க், வெள்ளவத்தை சீகல் ரெசிடென்ஸ், விஜேராம மாவத்தை, நெதிமால ஆகிய பிரதேசங்களில் வீடுகளை வாங்கி பணச்சலவை செய்தனர் என்று, சட்டமா அதிபரால், மேற்குறித்த மூவருக்கும் எதிராக, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பணச்சலவைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டஇந்த வழக்கில், சட்டவிரோதமாகச் சம்பாதிக்கப்பட்ட 18.2 மில்லியன் ரூபா தொடர்பிலும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இது தொடர்பான மனு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மத்தேகொட, சொத்துகளைப் பராமரிப்பதற்காக, நீதிமன்றத்தால் பராமரிப்பாளரொருவரை நியமிப்பதற்கு தமது ஆட்சேபனையைத் தெரிவித்தார். (உ)

## பாகிஸ்தான் உதவும் பிரதமர் நம்பிக்கை



தொடர்ச்சியாக இலங்கைக்கு உதவிகளை வழங்கத் தயார் என்று பாகிஸ்தானின் புதிய பிரதமர் ஷஹிட் கஹான் அப்பாஸி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உறுதியளித்துள்ளார். இரு நாடுகளுக்குமிடையில் இடம்பெறும் வர்த்தகப் பொருளாதார உறவுகளை மேலும் பலப்படுத்தி புதிய அணுகுமுறையூடாக அதனை முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக பாகிஸ்தான் பிரதமர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுச்சபை கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பாகிஸ்தான் பிரதமருக்கு மிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றபோதே பாகிஸ்தான் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நீண்டகாலமாக உள்ள இருதரப்பு உறவுகளை நினைவு கூர்ந்து அந்த உறவுகளை நீண்டகாலம் பேணக் கூடியவாறு பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை தலைவர்கள் இதன்போது வலியுறுத்தினார்கள். (உ)

## உயர் நீதிமன்ற வியாக்கியானம் ஜனநாயகத்தின் வெளிப்பாடு

அரசமைப்பின், 20ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில், உயர்நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு வழங்கியுள்ள வியாக்கியானமானது, நாட்டின் ஜனநாயகம், நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை வெளிப்படுத்துவதாக, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். 20ஆவது திருத்தம் தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் குறித்து, அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனநாயக நாட்டில் மக்களின் எதிர்பார்ப்புகள் - அபிலாஷைகள்நிறைவேற்றப்பட வேண்டும். நீதிமன்ற வியாக்கியானத்தில் சட்டமூலத்தை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறப்பட வேண்டும் என்பதற்கு மேலதிகமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தது. இதனால், இந்தத் திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படாமல் கைவிடப்படுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளன. நீதிமன்றத்தின் பரிந்துரையானது ஜனநாயகத்தின் வெளிப்பாடு என்பதுடன், மக்கள் நீதித்துறை மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு சான்றாகும். மக்கள் மாகாண சபைகளுக்கு வழங்கிய ஆணைக்கு மேலதிகமாக ஒரு நாளைக்கூட மேலதிமாக வழங்க முடியாது. கிழக்கு மாகாண சபை உள்ளிட்ட மூன்று மாகாண சபைகளினும் கால எல்லை நிறைவடைந்ததும் கலைத்து விட்டு உடனடியாக தேர்தல் அறிவிக்கப்படும். இதேவேளை, மாகாண சபைகளுக்கு பாதகமாக அமைந்துள்ள 20ஆவது திருத்தத்தை ஆய்வு செய்யாமல் தமது சொந்த இலாபத்துக்காக ஆதரவு வழங்கிய கிழக்கு மாகாண சபையின் செயற்பாடு கண்டிக்கத்தக்கதாகும்" என்றார். (உ)

## நாளை நாளும் கோளும்


22.09.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 05 ஆம் நாள்

பிரதமை மு.ப. 11.02 வரை அத்தம் பி.இ. 12.52 வரை சித்தயோகம்
இராகுகாலம் 01.32 - 03.02 சுபநேரம் 07.32 - 09.02 எமகண்டம்06.02 - 07.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கவனம் | விருத்தி | தேர்ச்சி | இரக்கம் | சிக்கல் | எதிர்வு | நன்மை | புகழ் | பொறுமை | போட்டி | சுகம் | ஆக்கம் |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



**1966.09.20**

சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனை நோக்கிச் செலுத்தப்பட்டது.

## கல்விச் செயலமர்வு





வடக்கு மாகாணத்தில் 2017 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெறு பேற்று அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்கிலான செயலமர்வுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வகையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மன்னார் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான விசேட செயலமர்வு இன்று மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. (உ)

# ஆபத்தான பாலம்; புனரமைக்கக் கோரிக்கை



முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம் பிரதான வீதியில் ஆபத்தான நிலையில் காணப்படும் பாலத்தை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு - வவுனிக்குளம் பிரதான வீதி ஊடாக பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளுக்கு செல்லும் பிரதான வீதியில் அருகில் பாலமொன்று காணப்படுகிறது. குறித்த பாலத்தின் பாதுகாப்பு சுவர்கள் உடைந்துள்ள நிலையில் பாலம் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. இதனால் விபத்துக்கள் ஏற்படும் நிலை அதிகமாகவே உள்ளது. இதேவேளை, ஏற்கனவே இந்த பாலத்தில் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. எனவே விரைவாக இந்தப் பாலத்தை புனரமைத்துத்தர வேண்டும் எனமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ)

## யாழில் சுற்றுலாத்துறை விழிப்புணர்வுப் பேரணி

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வட மாகாண சுற்றுலாத்துறை அமைச்சு எதிர்வரும் 25 ஆம் திகதி விழிப்புணர்வுப் பேரணியை யாழில் நடத்தவுள்ளது.

யாழ்.புகையிரத நிலைய முன்றலிலிருந்து காலை 9 மணிக்கு ஆரம்பிக்கும் பேரணி வைத்தியசாலை வீதி ஊடாகப் பயணித்து சத்திரச் சந்தியைச் சென்றடையும். அங்கிருந்து கே.கே.எஸ். வீதியூடாக பயணித்து பண்ணைக் கடற்கரையில் நிறைவடையவுள்ளது. இந்த விழிப்புணர்வுப் பேரணியை வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் ஆரம்பித்து வைக்கவுள்ளார். பேரணியைத் தொடர்ந்து யாழ்.பொது நூலகத்தில் நிகழ்வுகள் இடம்பெறும். இதன்போது சுற்றுலாத்துறை தொடர்பான நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதோடு, இணையத்தளமும் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவூட்டும் ஊடக சந்திப்பு நேற்றுமாலை வட மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது. (உ-04)

# தியாகி திலீபன் நினைவேந்தல் நிகழ்வு

தியாகி திலீபனின் 30ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதிநாள் நிகழ்வுகளை பொது அமைப்புகள் மற்றும் கட்சிகளுடன் இணைந்து நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. இது தொடர்பில் அவர்களால் விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

எதிர்வரும் 26ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் நல்லூரிலுள்ள நினைவுத்தூபி முன்பாக குறித்த அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகும். இந்நிகழ்வில் பொது மக்கள், அனைத்து அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்புக்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஒட்டுமொத்த தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக தனது உடலை மெழுகாக உருக்கி மண்ணுக்காக மரணித்த மாவீரனுக்கு வணக்கம் செலுத்த வேண்டியது தமிழ் தேசத்து மக்கள் அனைவதும் கடமையாகும்.

குறித்த நிகழ்வில் அரச நிர்வாக திணைக்களங்கள், கல்வித்திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவன விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ள ஆவன செய்து ஒத்துழைக்குமாறு சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள், தனியார் நிறுவன உரிமையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.- என்றுள்ளது. (எ)

# சுகாதார அமைச்சுக்கு இணைப்பு அலுவலகம்



வட மாகாண சுகாதார அமைச்சின் இணைப்பு அலுவலகம் மன்னாரில் இன்று காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த உப அலுவலகம் மன்னார், பள்ளிமுனை பிரதான வீதியில் இன்று காலை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சி.ஏ.சந்திரையா உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தென்கொரி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பங்கேற்பாளர்களிடையே இருதரப்பு மற்றும் 'இராணுவ இராஜதந்திரத்துக்கான' வாய்ப்பு தொடர்பாக ஆராயப்பட்டது. (அ)

**மாணவிக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீறி, முத்தமிட்டுள்ளார்.இது குறித்து அந்த மாணவி தனது பெற்றோரிடம் முறைப்பாடு செய்தார்.தொடர்ந்து, மாணவியின் பெற்றோர் பொலிஸில் முறையிட்டதன் அடிப்படையில், சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

**ஐ.நா. ...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யல் வட்டாரங்களில் சர்ச்சை உருவெடுத்துள்ளது. இதேவேளை, மைத்திரியின் இளைய மகள் தராணி சிறிசேன அமெரிக்காவிலேயே வசித்து வருவதால், அவரைப் பார்க்கவே மைத்திரி குடும்பத்தோடு சென்றிருப்பதாகவும், மைத்திரியின் குடும்பத்தைச் சேர்ந்த எவரும் ஐ.நா கூட்டத் தொடரில் கலந்து கொள்ள மாட்டார்கள் எனவும் அரச தரப்பு தெரிவித்துள்ளது(ஆ)

**லலித்துக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மகிந்தவுக்கு ஆதரவான பிரசாரங்களுக்காக தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் 600 மில்லியன் ரூபா செலவில் 'சில்' உடை கொள்வனவு செய்த மோசடி தொடர்பில் இடம்பெற்று வந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பு அண்மையில் வழங்கப்பட்டது.இதன்படி, அவர்கள் இருவருக்கும் தலா மூன்று வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனையுடன், தலா 20 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது,அத்துடன், இருவரும் தலா 50 மில்லியன் ரூபா அடிப்படையில் அரசாங்கத்திற்கு நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

**நாடாளு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நின்றவாறு சுமந்திரன் தொடர்ந்து உரையாற்ற முற்பட்டார். இந்நிலையில் ஆத்திரமடைந்த ஒன்றிணைந்த எதிரணியின் உறுப்பினர்கள் சபைக்கு நடுவே வந்து நின்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதோடு தொடர்ந்து கூச்சல் குழப்பத்தை முன்னெடுத்தனர்.

தேர்தலைப் பிற்போடுவதற்காக அரசாங்கம் புதிது புதிதாக திருத்தங்களைக் கொண்டுவந்து காலத்தை இழுத்தடிப்பதாக அவர்கள் அதன்போது குற்றஞ்சாட்டினர். மாகாணசபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு தாம் அனுமதிக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்ட கூட்டு எதிரணியினர் அது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆராயவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இந்நிலையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு பிரதமர் அழைப்புவிடுத்தார். அதனையடுத்து கட்சித்தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதேவேளை சட்டமா அதிபருடன் தொடர்புகொண்டு திருத்தங்கள் தொடர்பில் ஆலோசனை பெறவும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-09)

**மாவா ...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைத்திருந்தமைக்காக தரம் - 10 இல் கல்வி கற்கும் மாணவன் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 20.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.